[3rd July 1957

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அபிப்பிராயப்படலாம். இதன் மூலம் அதிக கஷ்டங்கள்தான் ஏற்படும்.

SRI M. JAGANNATHAN : அட்வைஸரி கமிட்டி என்ற முறை இல்லாமல் " Statutory bodies " என்ற முறையில் ஏற்படுத்துமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படியென்றால் நம்முடைய அரசியல் அமைப்பையே மாற்ற வேண்டியதுதான். அப்படி ஒரு ஏற்பாடு இருந்தால் இன்று சட்டசபைக்கு இருக்கிற பொறுப்புகள் மாறி அதற்கு பதிலாக இந்த மாதிரியுள்ள சிறு சிறு கமிட்டிகளிடம்தான் பொறுப்பு இருக்கும்.

SRI A. GOVINDASAMY : இந்த அட்வைஸரி கமிட்டி வேண்டிய ஆலோசனை கூறுவதற்கு இருந்தாலும் அதை நிறைவேற்றுகின்ற பொறுப்பு அரசாங்கத்திற்கு அல்லவா இருக்கின்றன என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆலோசனை கூறும் கமிட்டி என்றாலே அப்படித்தான் அர்த்தம். அதனுடைய ஆலோசனைகளை ஏற்று நடத்தவேண்டியதுதான் அரசாங்கத்தின் பொறுப்பு.

SRI K. VINAYAKAM : Sir, do the Government feel that the Assembly Members, if constituted into advisory committees, will interfere too much with the working of the Government departments and impair their efficiency?

THE HON. SRI C. SUBRAMANIAM : I did not say so, Sir.

SRI M. C. MUTHUKUMARASWAMI : செல்வாக்கு படைத்தவர்களும் நல்ல வசதியுள்ளவர்களும் இந்த மாதிரியுள்ள கமிட்டிகளில் இருக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் விரும்புகிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கூடியவரையில் இப்போது பலருக்கும் கமிட்டியில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருடம் கமிட்டியில் இடம் இல்லாதவர்களுக்கு அடுத்த வருடம் கமிட்டிகளில் இருப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

General Election in 1957

* 50 *Q*.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the cost borne by the State Government on account of the recent General Election; and

(*b*) the proportion in which the total cost was met by the Union Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) In connection with the recent General Elections to the House of the People and the Madras Legislative Assembly the Government have incurred an expenditure of about Rs. 37,58,000 up to the end of April, 1957. Some more expenditure has to be incurred on certain items, such as final settlement of travelling allowance bills of polling personnel, etc.

(*b*) The Government of India meet 50 per cent of the total expenditure referred to under clause (*a*) above.

I think, Sir, I have already answered this question.

3rd July 1957]

Sri A. GOVINDASAMY : எலக்ஷன் நேரத்தில் புதிதாக தேர்தல் பெட்டிகள் ஏதாவது செய்யப்பட்டதுண்டா ? அவ்வித முண்டென்றால் அதற்கு செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதற்கு தனிக் கேள்வி போடும் படி கேட்டுக்கொள்கிறேன்.

Sri K. VINAYAKAM : Sir, are the Government aware that some of the Corporation teachers who were entrusted with the election work have not been paid till to-day their travelling allowance and daily allowance? Will the Government look into the matter and do the needful as early as possible?

The Hon. Sri C. SUBRAMANIAM : I have already stated in this House that instructions had been issued to expedite the payment of these allowances and that there should be no undue delay.

Sri S. B. ADITYAN : On a point of order, Sir. நமது விதிகளில் 31-வது விதியின்படி 'a question once fully answered in the Assembly must not be asked again' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த கேள்வி மீண்டும் கேட்கப்படுவது சரியா ? அதற்கு மந்திரி அவர்கள் மீண்டும் பதில் சொன்னது சரியா ? இதற்கு உங்களது தீர்ப்பை கூற வேண்டுகிறேன்.

DEPUTY SPEAKER : இது அஜெண்டாவில் சேர்க்கப்பட்டிருக் கிறது. The question had been included in the order paper. So, I cannot disallow it.

Sri A. GOVINDASAMY : தேர்தல் வேலை பார்த்தவர்களுக்கு இது வரை பிரயாணப்படி கொடுக்கப்படவில்லை. இதில் கூடுதலாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் ஆசிரியர்கள். ஆகவே அவர்களுக்கு இந்த பிரயாணப்படி உடனே கொடுக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சில இடங்களில் கொடுக்கப் படவில்லை என்று தெரிகிறது. இதில் என்ன கஷ்டம் ஏற்படுகிறது என்றால் இந்த பிரயாணப்படி பில் கொடுப்பதில் பலரும் சரியாக கொடுப்பதில்லை. இதனால் அவர்களுக்கு திருப்பி அனுப்பப்படுகிறது. ஆகவே இதை எவ்வளவு சீக்கிரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பட்டு வாடா செய்யவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

Houses for industrial workers

* 51 *Q*.—Sri S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any scheme for building houses for industrial workers in the City of Madras; and

(*b*) if so, the number of houses that have been constructed so far?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) 936 tenements.

Sri S. PAKKIRISAMI PILLAI : இத்தனை வீடுகளும் அந்த இடங் களில் கட்டி முடிந்தாய்விட்டது. இன்னும் அந்த வீடுகள் தொழிலாளர் களுக்கு கொடுக்கப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன ?